## தொடக்கக் கல்வி இயக்ககம்

விடுநர்

தொடக்கக் கல்வி இயக்குநர் மற்றும்
தகவல் அளிக்கும் அலுவலர்,
கல்லூரி சாலை,
சென்னை– 600 006.

பெறுநர்

தமிழ்நாடு தகவல் ஆணையர்,
தமிழ்நாடு தகவல் ஆணையம்,
காமதேனு சூப்பர் மார்கெட் 1st floor,
No,273 New No,378,
Anna salai. Teynampet,
Chennai-18.

ந.க.எண். 7503/ எச்3/ 08 நாள்– 18.8.2008.

அய்யா,

பொருள்– தொடக்கக் கல்வி உதவி பெறுபவை – தகவல் அறியும் உரிமை சட்டம் 2005–ன்படி திரு. ஜே.ஏ.ராபர்ட் பர்னாந்து தலைவர் –ஆவே மரியாசங்கம் உடன்குடி தகவல்அறியும் உரிமை சட்டம் 2005 –ன்கீழ் கோரிய தகவல்களுக்கு உரிய விவர அறிக்கை அனுப்புதல்.

பார்வை– தமிழ்நாடு தகவல் ஆணையம் வழக்கு எண். 2334A விசாரணை 2008.

------

கேள்விகள்

தூத்துக்குடி ஆர்.சி. டயோசியேசன் நிருவாகத்தில் உள்ள தொடக்க நடுநிலைப் பள்ளிகளில் ஒரு பள்ளியில் இருந்து மற்றொரு பள்ளிக்கு ஆசிரியர்களை இடம்மாற்றம் செய்ய உரிமை இல்லை என்று சென்னை உயர்நீதிமன்றத்தால் ஆணை வழங்கி அவ்வாணை அமுலில் இருந்து வந்தாலும் அவ்வாணைக்கு எதிராக பள்ளி நிருவாகம் ஒரு பள்ளியிலிருந்து மற்றொரு பள்ளிக்கு இடமாறுதல்கள் செய்துள்ளதற்கு உதவி தொடக்க கல்வி அலுவலர்கள் எந்த விதி முறையின் கீழ் ஒப்புதல் வழங்குகிறார்கள் என்பதாகும்.

2. தூத்துக்குடி மாவட்டத் தொடக்கக்கல்வி அலுவலர் ஆண்டு இறுதி போதனா மானிய கணக்கு முடிக்கும்போது மேற்கண்ட தவறான இடமாறுதலுக்கு உதவி தொடக்கக் கல்வி அலுவலர்கள் ஒப்புதல் அளித்தல் எந்த விதிமுறையின்படி ஏற்று இறுதி போதனாமானிய கணக்கு முடித்துள்ளார் என்பதற்கும் ஆதாரமாக அரசாணையோ விதியோ இருப்பின் அதன்விவரம் மனுதாரரால் கோரப்பட்டு அதற்கு தகவல் கீழ் குறிப்பிட்டவாறு தரப்படுகிறது.

பதில்

பல ஆண்டு காலமாக வாலயமாக ஆசிரியர்களுக்கு பள்ளி நிருவாகியால் மாறுதல் வழங்கப்பட்டுள்ளது. இப்பள்ளிகள் கூட்டு மேலாண்மை பள்ளிகள் இல்லை. கூட்டு மேலாண்மை பள்ளி என்பதற்கு ஆதாரமாக அரசாணைகளோ விதிமுறைகளோ இல்லை. மாறுதல் வழங்குவதற்கும் பள்ளி நிருவாகிக்கு உரிமை இல்லை என்று தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி ஆர்.சி.டயோசியேசன் நிருவாகிகள் மீது பல வழக்குகள் தொடரப்பட்டுள்ளன.

R.C.Diocese பள்ளிகளில் ஆசிரியர்களை நிருவாகம் மாறுதல் செய்தது தொடர்பான சென்னை உயர்நீதி மன்ற வழக்குகளை W.A எண்கள் 275 & 1037/1999 and W.P Nos, 7193 & 7235/1986 –ல் 30.4.98–ல் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அந்த தீர்ப்பு R.C. பள்ளிகளின் நிருவாகத்திற்கு